# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:42** **தேதி:-27.05.2015**

**FORUM கூட்ட முடிவுகள்**

அன்பார்ந்த தோழர்களே,

நமது அகில இந்திய ஃபோரம் கூட்டம் தலைவர் 25-05-2015 அன்று தோழர் சந்தேஷ்வர் சிங் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கன்வீனர் தோழர் பி.அபிமன்யூ வந்திருந்த அனைவரையும் வரவேற்று ஆய்படு பொருட்களை அறிமுகப்படுத்தி உரையாற்றினார்.

**இரவு 9மணிமுதல் காலை 7மணிவரையான இலவச அழைப்பு வசதியை, மக்களிடம் கொண்டுசேர்த்து, தரைவழி இணைப்புகளை அதிகரிக்க “ஒருமாதத் தொடர் இயக்கம்“**

**இந்தக் கூட்டம், இரவு 9மணி முதல் காலை 7மணிவரை தரைவழித் தொலைபேசியில் இலவசமாகப் பேசலாம் எனும் நிர்வாகத்தின் திட்டத்தை வரவேற்கிறது. அதேநேரம், இந்தத் திட்டம் போதுமான அளவிற்கு விளம்பரப் படுத்தி பொதுமக்களிடையே கொண்டுசெல்லப் படாதது குறித்துக் கவலை தெரிவித்தது. “ஜூன்-8முதல், ஜூலை-7, 2015 வரை, “ஒருமாதத் தொடர்இயக்கம்“ நடத்தி “இலவச அழைப்புகள் வசதி“ திட்டத்தை மக்களிடம் செம்மையாக விளக்கி, அதன் தொடர்ச்சியாக தரைவழித் தொலைபேசியை அதிகரிப்பதற்கான முயற்சியை எடுக்கவேண்டும் என்று ஃபோரம் ஒருமனதாக முடிவெடுத்தது. இந்த இயக்கத்தில் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் அனைவரும் பங்கெடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறது. இந்த முடிவை சிறப்பாக அமுல்படுத்த கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன:-**

1) **மாநில மாவட்ட மட்ட ஃபோரங்கள், அந்தந்த மாநில மாவட்ட நிர்வாகத்துடன் கலந்து பேசி இயக்கத்தை முன்னெடுப்பதற்கான ஒருங்கிணைப்பைச் செய்ய வேண்டும். அந்தந்த மாநில மாவட்ட முதன்மைப் பொது மேலாளரைச் சந்தித்து, குறைந்தபட்சம் ஜூன்-15க்குள் ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தை ஃபோரங்கள் வகுத்துக்கொள்ள வேண்டும்.**

2) **அதிக எண்ணிக்கையில் ஊழியர்கள் மற்றும் அதிகாரிகளை இந்த இயக்கத்தில் ஈடுபடச் செய்து, ஒரு வலுவான இயக்கமாக இதனை நடத்திட வேண்டும். ஃபளக்ஸ் போர்டு வைப்பது, சுவரொட்டி விளம்பரங்கள் மூலம் மக்களிடையே கொண்டு செல்ல வேண்டும். துண்டறிக்கைகளை வீடுவீடாகச் சென்று கொடுக்க வேண்டும். உள்ளூர் தொலைக்காட்சிகள் மற்றும் சமூக வலைத்தளங்கள் வழியாகவும் விளம்பரப்படுத்திட வேண்டும்.**

3) **இயன்ற இடங்களில் “மேளா“க்களை நடத்த வேண்டும். புதிதாகத் தோன்றிய அபார்ட்மெண்டுகள், தெருக்கள், குடியிருப்புகளில் புதிய இணைப்புக்கள் கொடுப்பதற்கான முயற்சிகளைக் கட்டாயமாகச் செய்திட வேண்டும்.**

(4) **அண்மையில் தமது இணைப்புக்களை துண்டித்துக்கொண்ட சந்தாதாரர்களை அணுகி, மறுஇணைப்பு / புதிய இணைப்புகள் கொடுப்பதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும்.**

(5) **பழுதற்ற சேவையைக் கொடுப்பதிலும் பழுதுவந்தால் உடனே சரிசெய்து கொடுப்பதிலும் காட்டும் நமது திறமைதான் "இலவச அழைப்புவசதி" திட்டத்தின் வெற்றிக்கு அவசியமானது என்பது சொல்லி தெரியவேண்டிய அவசியமில்லை. எனவே, இதில் தேவையான கவனத்தைச் செலுத்திடவேண்டும்.**

(6) **இதனை செயல்படுத்துவதில் ஏதாவது பொருட்கள், கருவிகள் மற்றும் நிதிப் பற்றாக்குறைகள் தடையாக இருந்தது என்றால் அதனை உடனடியாக மாநில மாவட்ட நிர்வாகங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். இது குறித்த கார்ப்பரேட் அலுவலகத்தின் தலையீடு தேவையெனில் அந்த விவரங்களை உடனடியாக அகில இந்திய ஃபோரம் அமைப்பின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும்.**

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**